**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**மூன்றாம் தவணைப் பரீட்சை- 2019**
**வணிகக்கல்வியும் கணக்கீடும்**

தரம்10

60 T I, II

மூன்று மணித்தியாலயங்கள்

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## பகுதி 1

**கவனிக்க:-**

I. **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக**

II. **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1) (2) (3) (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

- பின்வரும் சம்பவத்தை அவதானித்து 1 தொடக்கம் 5 வரையான வினாக்களுக்கு விடையெழுதுக.

சுபத்திரா என்பவர் தையற்கலை தொடர்பான டிப்ளோமா பட்டம் ஒன்றை பெற்றிருந்ததுடன், இணையவழி மற்றும் கணனியின் உதவியுடன் ஆடைகளை வடிவமைத்து விற்பனை செய்யும் வணிகமொன்றை 'ஸ்மார்ட் ஆடையகம்' என்னும் பெயரில் நடாத்தி வருகின்றார்.

01. இச்சம்பவத்தில் 'ஸ்மார்ட் ஆடையகம்' வணிகத்தின் மூலம் திருப்தி செய்யப்படும் அடிப்படை மனிததேவை எது?
(1) சுகாதாரம் (2) உடை (3) சுடிதார் (4) கல்வி

02. மேற்படி வணிகத்தில் உள்ளகரீதியாக அக்கறை கொள்ளும் தரப்பினராகக் கருதப்படக்கூடியவர்,
(1) ஆடைகளை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்
(2) குறித்த வணிகத்திற்கு துணிகளை வழங்கும் வழங்குநர்
(3) குறித்த வணிகத்தின் உரிமையாளரான சுபத்திரா
(4) குறித்த வணிகத்திற்கு போட்டியாளராக செயற்படும் வேறு ஆடை உற்பத்தி நிறுவனங்கள்

03. சுபத்திரா தையற்கலை தொடர்பாக டிப்ளோமா பட்டம் பெற்றிருந்தமையானது அவ்வணிகத்திற்கு ஒரு,
(1) பலமாகும். (2) பலவீனமாகும். (3) வாய்ப்பாகும். (4) அச்சுறுத்தலாகும்.

04. 'ஸ்மார்ட் ஆடையகம்' வணிகம் தொடர்பாக சட்டத்தேவைப்பாடாகக் கருதப்படுவது,
(1) 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படல் வேண்டும்.
(2) 1918 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க வணிகப்பெயர்ப்பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படல்வேண்டும்.
(3) 1890 ஆம் ஆண்டு பங்குமைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படல் வேண்டும்.
(4) பதிவு செய்ய வேண்டிய கட்டாயமில்லை.

05. மேற்குறித்த வணிகத்திடம் காணப்படும் தையல் இயந்திரங்கள் உள்ளடங்கும் உற்பத்திக் காரணியாக அமைவது,
(1) நிலம் (2) மூலதனம் (3) உழைப்பு (4) முயற்சி

06. மனித தேவைகளின் பண்புகள் தொடர்பாக பின்வருவனவற்றில் எது சரியானது,
(1) அனைத்து சமூகங்களிற்கும் பொதுவானவை (2) இரண்டாம் நிலைக்குரியது
(3) பல்வகைத் தன்மை கொண்டது (4) வரையறுக்கப்படாதவை



kalvi.lk

07. பின்வரும் வணிகங்கங்களில் சேவைகளை வழங்கும் வணிகமாகக் கருதப்படக் கூடியது,
   (1) மோட்டார் வாகன உற்பத்தி நிறுவனங்கள்
   (2) குளிர்பான வகைகளினை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள்
   (3) மோட்டார் வாகனங்களை பழுது பார்க்கும் நிறுவனங்கள்
   (4) தளபாட உற்பத்தி நிறுவனங்கள்

08. பின்வருவனவற்றில் மக்கட் சூழல் காரணிகளை மட்டும் உள்ளடங்கும் தொகுதியாக அமைவது,
   (1) சனத்தொகை அளவு, வருமானம், பணவீக்கம்
   (2) மொத்த தேசிய உற்பத்தி, சேமிப்பு, முதலீடு
   (3) சட்டங்கள், வரிக்கொள்கை, சனத்தொகை அளவு
   (4) சனத்தொகை அளவு, ஆயுட்காலம், வயது

09. வணிகங்கள் தமது பலங்களையும், பலவீனங்களையும் அறிந்து கொள்வதற்கு,
   (1) வணிகச் சூழலை ஆராய்தல் வேண்டும்
   (2) புறச்சூழலை ஆராய்தல் வேண்டும்.
   (3) அகச்சூழலை ஆராய்தல் வேண்டும்.
   (4) மேற்கூறிய அனைத்தையும் ஆராய்தல் வேண்டும்.

10. வணிகமொன்றிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட பெயர் ஒன்று இருத்தல் வணிகம் முன்னேற்றமடைவதற்கு காரணமாக அமையும். வணிகத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெயர் வணிகத்தின்,
   (1) வாய்ப்பாகக் காணப்படும் (2) பலமாகக் காணப்படும்
   (3) அச்சுறுத்தலாகக் காணப்படும் (4) பலவீனமாகக் காணப்படும்

11. திறந்த பொருளாதாரக் கொள்கையால் உள்நாட்டு சிறுகைத்தொழில்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது. இக்கொள்கைக்குரிய சூழல் காரணியாக அமைவது,
   (1) பொருளாதாரச் சூழல் (2) அரசியல் சூழல்
   (3) சட்டச்சூழல் (4) பூகோளமயச் சூழல்

12. பொதுத்துறையைச் சேர்ந்த முழுமையாக சேவை நோக்கம் கொண்ட, சட்ட ஆளுமையற்ற அமைப்பிற்கு சிறந்த உதாரணமாக அமைவது,
   (1) அரச திணைக்களம் (2) அரச கம்பனிகள்
   (3) அரச கூட்டுத்தாபனம் (4) கூட்டுறவு வணிகம்

13. தனியுடைமை வணிகம் தொடர்பான **பிழையான** கூற்றாக அமைவது,
   (1) இலாபம் முழுவதும் தனி ஒருவரே அனுபவிக்கலாம்
   (2) சட்ட ஆளுமை இல்லை
   (3) நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்டது
   (4) நட்டப்பொறுப்பு வரையறுக்கப்படாதது

14. ‘கமலன் அன்ட் விமலன் சகோதரர்கள்’ என்னும் வணிகம் எவ்வியாபார அமைப்பைச் சேர்ந்தது,
   (1) தனியுடைமை (2) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்
   (3) பங்குடைமை (4) கூட்டுறவு வணிகம்

15. சட்டத்தின்படி பதிவு கட்டாயமாக்கப்படாத நிறுவனங்களைக் கொண்ட தொகுதியாக அமைவது,
   (1) தனியுடைமை, கூட்டுறவு வணிகம்
   (2) கூட்டுறவு வணிகம், கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்
   (3) பங்குடைமை வணிகம், கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்
   (4) பங்குடைமை வணிகம், தனியுடைமை வணிகம்

16. கூட்டுறவு அமைப்பில் காணப்படக் கூடிய விசேட பண்பாகக் கருதப்படக்கூடியது,
   (1) இலாபமும், உரிமையும் அதிகமானவர்களிடையே பகிரப்படல்
   (2) சுயமான திறந்த அங்கத்துவம் காணப்படல்
   (3) நட்டப்பொறுப்பு வரையறுக்கப்படாதிருத்தல்
   (4) ஆகக் குறைந்த அங்கத்தவர் எண்ணிக்கை இரண்டாகக் காணப்படல்



kalvi.lk

17. வணிகக் கருமங்களுக்காக பயன்படுத்துகின்ற கட்டடம், மோட்டார் வாகனம், காசு, சரக்கிருப்பு போன்றவற்றைக் குறிப்பது,
(1) பொறுப்பு (2) சொத்து (3) உரிமை (4) வருமானம்

18. வணிகம் ஒன்று காப்புறுதிக் கட்டணம் ரூ 4000 ஐச் செலுத்தும் போது,
(1) சொத்துக்கள் ரூ 4000 ஆல் குறைவடைவதுடன் உரிமையாண்மை ரூ 4000 ஆல் குறைவடையும்
(2) சொத்துக்கள் ரூ 4000 ஆல் குறைவடைவதுடன் உரிமையாண்மை ரூ 4000 ஆல் அதிகரிக்கும்
(3) சொத்துக்கள் ரூ 4000 ஆல் அதிகரிப்பதுடன், பொறுப்புக்கள் ரூ 4000 ஆல் அதிகரிக்கும்
(4) உரிமை ரூ 4000 ஆல் குறைவடைவதுடன் பொறுப்புக்கள் ரூ 4000 ஆல் அதிகரிக்கும்

19. வணிகமொன்று வணிக வங்கிகளில் பெற்றுக்கொள்ளும் ' வங்கி மேலதிகப் பற்று' உரித்தாவது,
(1) நடைமுறைச்சொத்து (2) நடைமுறைஅல்லாப் பொறுப்பு
(3) நடைமுறைப்பொறுப்பு (4) நடைமுறைஅல்லாச் சொத்து

20. வணிகமொன்றின் உரிமையினை மாற்றமடையச் செய்யும் நடவடிக்கை அல்லாதது,
(1) மேலதிக மூலதனமிடல் (2) நானாவித வருமானம் பெறப்படல்
(3) காசாகப் பற்றுதல் (4) காணிகட்டடம் கொள்வனவு

❖ 21, 22, 23, 24 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.
A. ரூ 50000 மூலதனமாக இடப்படல்
B. ரூ 30000 தளபாட உபகரணம் கொள்வனவு செய்யப்படல்
C. ரூ 5000 சம்பளம் செலுத்தப்படல்
D. ரூ 10000 நானாவித வருமானம் பெறப்படல்
E. ரூ 25000 வங்கிக்கடன் பெறப்படல்

21. வணிகத்தின் உரிமையும், சொத்தும் அதிகரிக்கும் கொடுக்கல் வாங்கல்/ வாங்கல்களாக அமையும் எழுத்து/ எழுத்துக்களைக் குறிப்பது,
(1) A, C (2) B, E (3) A, D (4) D

22. சொத்து அதிகரித்தல், பொறுப்பு அதிகரித்தல் என்ற இரட்டை விளைவினைக் காட்டும் கொடுக்கல் வாங்கலைக் குறிப்பது,
(1) A (2) B (3) C (4) E

23. கொடுக்கல் வாங்கல் B இற்கான இரட்டைப்பதிவாக அமைவது,
(1) தளபாட உபகரணக் கணக்கு வரவு ரூ 30 000, காசுக் கணக்கு செலவு ரூ 30 000
(2) காசுக் கணக்கு வரவு ரூ 30 000, தளபாட உபகரணக் கணக்கு செலவு ரூ 30 000
(3) தளபாட உபகரணக் கணக்கு வரவு ரூ 30 000, வங்கிக் கணக்கு செலவு ரூ 30 000
(4) வங்கிக் கணக்கு வரவு ரூ 30 000, தளபாட உபகரணக் கணக்கு செலவு ரூ 30 000

24. கொடுக்கல் வாங்கல் C ஆனது எவ்வகைக் கணக்குகளில் உள்ளடங்குகின்றது?
(1) பொறுப்புக் கணக்கு (2) வருமானக் கணக்கு
(2) செலவுக் கணக்கு (4) உரிமைக் கணக்கு

25. கொடுக்கல் வாங்கலை பதிவு செய்வதற்கான ஓர் இரட்டைப் பதிவு கீழே தரப்பட்டுள்ளது.
காசுக் கணக்கு வரவு ரூ 15 000
கடன்பட்டோர் கணக்கு செலவு ரூ 15 000
இங்கு நிகழ்ந்த கொடுக்கல் வாங்கல்,
(1) ரூ 15 000 பெறுமதியான சரக்குகள் கடனுக்கு விற்கப்பட்டன.
(2) கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து ரூ 15 000 காசாக பெறப்பட்டது.
(3) ரூ 15 000 பெறுமதியான சரக்குகள் காசுக்கு விற்கப்பட்டது.
(4) கடன்பட்டோரிற்கு ரூ 15 000 கழிவு அனுமதிக்கப்பட்டது



kalvi.lk

26. மீள் விற்பனைப் பொருட்களை கடனுக்கு கொள்வனவு செய்வதற்கான மூல ஆவணம் மற்றும் முதன்மையேடு என்பவற்றை ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவு செய்க.
(1) பற்றுச் சீட்டு, காசேடு
(2) விற்பனைக் குறிப்பு, விற்பனைப் பட்டியல்
(3) கொள்வனவு நாட்குறிப்பு, கொள்வனவுப் பட்டியல்
(4) கொள்வனவு பட்டியல், கொள்வனவு நாட்குறிப்பு

27. 01.01.2019 இல் மிதுரா வணிகத்தின் காசுமீதி ரூ 55 000 ஆகும். கீழே தரப்படும் கொடுக்கல் வாங்கல் நிகழ்ந்த பின் நிறுவனத்தின் காசுமீதியை சரியாகக் காட்டுவது,
- சம்பளம் செலுத்தியது ரூ 15 000
- பொருட்களாகப் பற்றியது ரூ 3 000
- கவியரசனுக்கு பொருள் விற்பனை ரூ 15 000
- வாடகை வருமானம் பெற்றது ரூ 20 000

(1) ரூ 60 000 (2) ரூ 78 000 (3) ரூ 70 000 (4) ரூ 75 000

28. நிபந்தனையாக அனுமதிக்கப்பட்ட காலப்பகுதியினுள் கடன்கொடுத்தோருக்குப் பணம் செலுத்தும்போது கொடுக்கவேண்டிய தொகையிலிருந்து கடன்கொடுத்தோர்களால் கழித்துக்கொள்ளப்படும் பெறுமானமாகக் கருதப்படுவது,
(1) பெற்ற காசுக் கழிவு (2) கொடுத்த காசுக்கழிவு
(3) பெற்ற வியாபாரக்கழிவு (4) கொடுத்த வியாபாரக் கழிவு

29. விமலன் வணிகத்தினது சில்லறைக் காசேட்டு வசக்கட்டு ரூ 3000 ஆகும். 30.06.2019 இல் சில்லறைக் காசாளரிடமிருந்த மீதி 250 ஆகும். 01.07.2019 இல் சில்லறைக் காசேடானது மீள நிரப்பப்பட்டது. சில்லறைக் காசேட்டு வசக்கட்டை மீள நிரப்புவது தொடர்பான சரியான இரட்டைப்பதிவு எது?
(1) சில்லறைக் காசேடு வரவு ரூ 3000, காசேடு செலவு ரூ 3000
(2) சில்லறைக் காசேடு வரவு ரூ 2750, காசேடு செலவு ரூ 2750
(3) காசேடு வரவு ரூ 3000, சில்லறைக் காசேடு செலவு ரூ 3000
(4) காசேடு வரவு ரூ 2750, சில்லறைக் காசேடு செலவு ரூ 2750

❖ 30 தொடக்கம் 34 வரையான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.
A. பொதுநாட்குறிப்பு C. கொள்வனவு நாட்குறிப்பு
B. விற்பனை நாட்குறிப்பு D. காசேடு

30. வணிகமொன்று தனது தேவைக்கென மோட்டார் வாகனமொன்றை வரையறுத்த JET கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்தது. இக்கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கான மூலப்பதிவேடாக அமைவது,
(1) A (2) C (3) D (4) B

31. பேரேடாகவும், முதன்மையேடாகவும் தொழில்படும் ஏட்டினைக் குறிப்பது,
(1) B (2) D (3) A (4) C

32. மீள் விற்பனைக்கான பொருட்களை கடனுக்கு கொள்வனவு, விற்பனை செய்வது தொடர்பான கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்காக பயன்படுத்தும் ஏடுகளாகக் கருதப்படுவது,
(1) A, B (2) C, D (3) B, C (4) A, D

33. எழுத்து D யினால் குறிக்கப்படும் மூலப்பதிவேட்டின் செலவுப் பக்கத்திற்கான மூலஆவணமாக அமைவது,
(1) கொடுப்பனவுக் கைச்சாத்து (2) பற்றுச்சீட்டு (3) நாட்குறிப்புக் கைச்சாத்து (4) வைப்புச்சீட்டு



kalvi.lk

34. எழுத்து B யினால் குறிக்கப்படும் மூலப்பதிவேட்டில் பதிவு செய்யப்படும் கொடுக்கல் வாங்கலைத் தெரிவு செய்க.
   (1) காகிதாதி விற்பனை செய்யும் வணிகமொன்று ஒவ்வொன்றும் 100 ரூபா விலையில் 100 CR கொப்பியினை ஜெயா புத்தகசாலையிலிருந்து கொள்வனவு செய்தது.
   (2) இரும்புப் பொருட்களை விற்பனை செய்யும் வணிகமொன்று ஒவ்வொன்றும் 500 ரூபா விலையில் 50 கம்பிகளை விற்பனை செய்தது.
   (3) மரத்தளபாட விற்பனை நிலையமொன்று ஒவ்வொன்றும் ரூபா 750 விலையில் 50 கதிரைகளை வயைறுத்த டொக்கியாட் நிறுவனத்திற்கு விற்பனை செய்தது.
   (4) தைத்த ஆடைகளை விற்பனை செய்யும் வணிகமொன்று ஒவ்வொன்றும் ரூபா 500 விலையில் 100 ஆண்களுக்கான மேற்சட்டைகளை கொள்வனவு செய்தது.

35. வங்கிக் கணக்கினை திருத்துவதற்கு பயன்படுத்தும் மூல ஆவணம் எது?
   (1) காசோலை அடியிதழ்
   (2) வங்கி கணக்கிணக்கக் கூற்று
   (3) வங்கிக் கூற்று
   (4) காசோலை வைப்புத்துண்டு

36. வணிகமொன்றின் வங்கிக்கணக்கின் செலவு மீதியானது வணிகத்திற்கு,
   (1) ஒரு சொத்ததாகும்
   (2) ஒரு வருமானமாகும்
   (3) ஒரு பொறுப்பாகும்
   (4) ஒரு செலவீனமாகும்

37. வங்கிக் கணக்கிணக்கக்கூற்றைத் தயாரிக்கும்போது வணிகத்தின் வங்கிக்கணக்கினைத் திருத்துவதற்கு பயன்படுத்தும் கொடுக்கல் வாங்கலைத் தெரிவு செய்க.
   (1) கடன்கொடுத்தோரான நந்தாவிற்கு பிறப்பிக்கப்பட்ட ரூ 5000 காசோலை வங்கிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.
   (2) விமலாவிடமிருந்து கிடைத்த ரூ 10000 காசோலை வங்கியில் வைப்புச் செய்யப்பட்டபோதும் வங்கியில் வசூலிக்கப்படவில்லை.
   (3) நேரடி வைப்புச் செய்யப்பட்ட காசோலை ரூ 10000.
   (4) ஜெயாவிடமிருந்து கிடைத்த ரூபா 10000 காசோலை வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது. ஆனால் வங்கிக் கூற்றில் பதிவு செய்யப்படவில்லை.

38. வணிகமொன்றின் குறித்தகால இறுதியில் பேரேட்டுக் கணக்குகளின் வரவு, செலவு மீதிகளின் எண்கணித ரீதியான சரியான தன்மையை அறிவதற்காக தயாரிக்கப்படுவது,
   (1) பரீட்சைமீதி
   (2) நிதிநிலைமைக் கூற்று
   (3) தொங்கல் கணக்கு
   (4) வருமானக் கூற்று

39. பின்வரும் கொடுக்கல் வாங்கலில் வெளிக்காட்டும் வழுவாகக் கருதப்படுவது,
   (1) ரூ 50000 க்கு கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருள் பட்டியலொன்று கணக்கேடுகளில் முழுமையாக விடுபட்டிருந்தது.
   (2) ரூ 20000 க்கு கடனுக்கு விற்பனை ரூ 2000 என விற்பனை நாடகுறிப்பில் பதியப்பட்டுள்ளது.
   (3) ரூ 10000 பெறுமதியான விற்பனை பட்டியலொன்று கணக்குகளில் இருமுறை பதியப்பட்டிருந்தது.
   (4) தொலைபேசிக் கட்டணம் ரூ 15000 இற்கான கொடுப்பனவு காசேட்டில் மட்டும் பதியப்பட்டிருந்தது.

40. அலுவலகச் செலவுகள் ரூ 10000 ஆனது, அலுவலக உபகரணக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இத்தவறினை திருத்துவதற்கான சரியான நாட்குறிப்பாக அமைவது,
   (1) அலுவலக செலவுக் கணக்கு வரவு ரூ 10000, தொங்கல் கணக்கு செலவு ரூ 10000
   (2) தொங்கல் கணக்கு வரவு ரூ 10000, அலுவலகச் செலவுக் கணக்கு ரூ 10000
   (3) அலுவலகச் செலவுக் கணக்கு வரவு ரூ 10000, அலுவலக உபகரணக் கணக்கு செலவு ரூ 10000
   (4) தொங்கல் கணக்கு வரவு ரூ 10000, அலுவலக உபகரணக் கணக்கு செலவு ரூ 10000

(40×1=40 புள்ளிகள்)



kalvi.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## மூன்றாம் தவணைப் பரீட்சை- 2019
## வணிகக்கல்வியும் கணக்கீடும்

தரம்10 பகுதி 11

**அறிவுறுத்தல்:-**
**முதலாம் வினா உட்பட, பகுதி 1 இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி 11 இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

**வினா இல 01**

❖ **பின்வரும் சம்பவத்தை பயன்படுத்தி (1) தொடக்கம் (10) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

அருண்மொழி என்பவர் சிறியளவில் அச்சுக்கூடம் ஒன்றினை 'மொழி அச்சகம்' என்னும் பெயரில் நடாத்தி வருகின்றார். அருண்மொழி இயல்பாகவே வித்தியாசமான முறையில் வடிவமைக்கும் திறனையும், கணினி அறிவினையும் கொண்டிருந்தமையால் விசேட வைபவங்களுக்குத் தேவையான அழைப்பிதழ்களை குறைந்த செலவில் தயாரித்து வழங்கி தனக்கென வாடிக்கையாளரை சிறிது காலத்திலேயே பெற்றுக் கொண்டிருந்தார். எனவே தனது வணிகத்தை மேலும் விரிவுபடுத்த எண்ணியதுடன், சட்ட ஆளுமையுள்ள, வரையறுத்த நட்டப்பொறுப்புள்ள வணிக அமைப்பாக மாற்ற எண்ணியுள்ளார்.

- 01.07.2019 இல் மொழி அச்சகத்தில் காணப்பட்ட மீதிகள் வருமாறு:-

| | |
|---|---|
| மூலதனம் | ரூ 200 000 |
| அச்சக இயந்திரம் | ரூ 150 000 |
| காணிகட்டடம் | ரூ 100 000 |
| கடன்பட்டோர் | ரூ 50 000 |
| வங்கிக்கடன் | ரூ 100 000 |
| கடன்கொடுத்தோர் | ரூ 30 000 |
| காசுமீதி | ரூ 30 000 |

- யூலை முதல் வாரத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு:-

| | | |
|---|---|---|
| 03.07.2019 | காகிதாதி கொள்வனவு | ரூ 50 000 |
| 04.07.2019 | தயா நிறுவனத்திடம் காகிதாதி கொள்வனவு | ரூ 30 000 |
| 05.07.2019 | மின்சாரக் கட்டணம் செலுத்தியது | ரூ 2 000 |
| 06.07.2019 | அழைப்பிதழ் விற்பனை | ரூ 75 000 |
| 07.07.2019 | இயந்திர திருத்தம் | ரூ 5 000 |

1) (அ) அருண்மொழி வணிகத்தின் பலமான அம்சங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
   (ஆ) குறித்த நிறுவனத்திற்கு வழங்குநராக செயற்படும் ஒரு நிறுவனத்தின் பெயரைக் குறிப்பிடுக.
2) (அ) மேற்படி வணிகத்தை உற்பத்தியின் தன்மையடிப்படையில் எவ்வகையான வணிகமாகக் கருத முடியும்?
   (ஆ) மேலே (அ) வில் வழங்கப்பட்ட வணிகத்தின் பண்புகள் இரண்டு தருக.
3) (அ) அருண்மொழி தனது வணிகத்தை பதிவு செய்துள்ளாரெனின் பதிவு செய்தலில் குறித்த வணிகத்திற்கு கிடைக்கும் அனுகூலங்கள் இரண்டு தருக.
   (ஆ) பதிவு செய்வதன் மூலம் மொழி அச்சகத்திற்கு தனி மனித அந்தஸ்து கிடைக்குமா? இல்லையா?
4) (அ) அருண்மொழி எதிர்காலத்தில் எவ்வகையான வணிக அமைப்பினை ஆரம்பிக்க முடியும் என சிபார்சு செய்கின்றீர்?
   (ஆ) நீர் மேலே (அ) வில் சிபார்சு செய்யும் வணிகத்தை எச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யவேண்டும்?
5) 01.07.2019 இல் மொழி அச்சகத்தில் காணப்பட்ட மீதிகளை பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் பதிந்து காட்டுக.

   உரிமை + பொறுப்பு = சொத்து

6) 04.07.2019 இல் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கலுக்கான மூல ஆவணத்தையும், மூல ஏட்டினையும் குறிப்பிடுக.

7) 01.07.2019 இல் உள்ள மீதியின்படி நடைமுறைச் சொத்தின் பெறுமதியையும், நடைமுறையல்லாப் பொறுப்பின் பெறுமதியையும் குறிப்பிடுக.
8) இயந்திரத் திருத்தத்திற்கான இரட்டைப்பதிவினைத் தருக.
9) குறித்த நிறுவனத்தின் செலவுக் கணக்குகளுக்கு இரண்டு உதாரணம் தருக.
10) யூலை முதல் வாரத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களை காசுக் கணக்கினை தயாரிப்பதன் மூலம் காசுமீதியினைக் கணிப்பிடுக.

(10×2=20 புள்ளிகள்)

**பகுதி 11**
**வணிகக்கல்வி**
**(இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக)**

**வினா இல 02**

1) (அ) மனித விருப்பம் என்றால் என்ன?
(ஆ) மனித விருப்பங்களின் பண்புகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

2) பின்வரும் கூற்றுக்கள் உண்மையா? பொய்யா? எனக் குறிப்பிடுக.
i. பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வதற்காக வணிகங்களால் பயன்படுத்தப்படும் இயற்கை வளங்கள் மூலதனம் எனப்படும்.
ii. யாதேனும் வணிகமொன்றின் மூலம் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருளுக்கு சமமான பொருட்கள், சேவைகளை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவோர் வழங்குநர் ஆவார்.
iii. வணிகமொன்றில் ஊழியர்கள் அகச் சூழலாக காணப்படும் அதேவேளை போட்டியாளர் புறச்சூழல் காரணியாகக் காணப்படுகின்றனர்.
iv. பலநோக்கு கூட்டுறவுச் சங்கமானது உரிமையடிப்படையில் தனியார்துறைக்குரிய அமைப்பாகும். (02 புள்ளிகள்)

3) பாடசாலையிலிருந்து கிடைக்கப்பெறும் கட்டளைக்கமைய புதிய தையல் இயந்திரங்களை கொண்டு பாடசாலை மாணவருக்கான கழுத்துப்பட்டி, மற்றும் சீருடைகளை உற்பத்தி செய்தல் தொடர்பான வணிகமொன்றை ஆராதனா நடரத்தி வருகின்றார்.
(அ) ஆராதனாவின் வணிகத்தின் மூலம் பூர்த்தி செய்யப்படும் அடிப்படை மனித தேவை யாது?
(ஆ) இந்த வணிகத்தில் காணப்படும் உற்பத்திக் காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

4) விலங்கு வேளாண்மை தொடர்பாக டிப்ளோமா பட்டம் பெற்ற ரொஷான் என்பவர் இயற்கை உணவு வகைகளுக்கான அதிகரித்த கேள்வியினைக் கருத்தில்கொண்டு இரண்டு தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி விலங்கு பண்ணை ஒன்றை நடாத்தி வருகின்றார்.
(அ) சம்பவத்தில் குறிப்பிடப்படும் அகச்சூழல் காரணிகள் இரண்டு தருக.
(ஆ) ரொஷானின் வணிகத்தில் இனங்காணக்கூடிய பலம் மற்றும் வாய்ப்பு ஒவ்வொன்று தருக.
(02 புள்ளிகள்)
(மொத்தம் 08 புள்ளிகள்)

**வினா இல- 03**

01. (அ) வணிகச்சூழல் என்றால் என்ன?
(ஆ) வணிகச்சூழலின் இருவகைகளையும் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

02. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா? பொய்யா எனக் குறிப்பிடுக.
i.தேவைகளை உருவாக்க முடியாது. விருப்பங்களை வணிகர்களால் தோற்றுவிக்க முடியும்.
ii.உள்ளகச்சூழலை ஆய்வு செய்வதன் மூலம் வாய்ப்பு, அச்சுறுத்தலை அறிந்து கொள்ள முடியும்.
iii.வணிக அமைப்புக்களை பருமன் அடிப்படையில் வகைப்படுத்தும்போது பயன்படுத்தும் வலுவின் அளவு என்பது அளவு ரீதியான நியதியாகும்.
iv.சுதந்திரமான தீர்மானமெடுத்தல் என்பது பங்குடைமை வணிகத்தில் காணப்படும் அதேவேளை தனியுடைமை வணிகத்தில் காணப்படுவதில்லை. (02 புள்ளிகள்)

03. பிரபல பாடசாலைக்கு அண்மையில் இந்திரன் என்பவர் காகிதாதிப் பொருட்களை விற்பனை செய்யும் வணிகமொன்றை 'சேகரம் புத்தகசாலை' என்னும் பெயரில் நடாத்தி வருகின்றார்.
(அ) மேற்குறித்த வணிகம் எவ்வணிக அமைப்பைச் சார்ந்தது?
(ஆ) மேற்படி வணிகத்தை பதிவு செய்வது தொடர்பான சட்டத்தேவைப்பாட்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளி)



kalvi.lk

04. பின்வரும் அக்கறை செலுத்தும் தரப்பினரிடமிருந்து வணிகமொன்று எதிர்பார்க்கும் பங்களிப்பு ஒவ்வொன்றுவீதம் குறிப்பிடுக.

(அ) வழங்குநர்

(ஆ) அரசாங்கம் (02 புள்ளிகள்)

(மொத்தம் 8 புள்ளிகள்)

**வினா இல 03**

01. (அ) இலாபநோக்கற்ற தனியார்துறை அமைப்புக்கள் இரண்டின் பெயர்களைக் குறிப்பிடுக.

(ஆ) பங்குடைமை ஒன்றில் பங்காளரது உச்ச எண்ணிக்கை 20 பேர் என வரையறுக்கும் சட்டத்தைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

02. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா? பொய்யா எனக் குறிப்பிடுக.

i. உற்பத்திக்காக மனிதனால் உருவாக்கப்பட்டவை மூலதனம் எனப்படும்.

ii. நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை, இலங்கை மின்சார சபை என்பன கூட்டுத்தாபன வணிக அமைப்பைச் சார்ந்ததாகும்.

iii. சமூக நல நோக்கம் கொண்ட நிறுவனமாக கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளைக் கருத முடியும்.

iv. வணிக உலகில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், சேவைகள் மிக விரைவில் காலவதியாகும் நிலைக்கு தள்ளப்படுவதற்கு காரணமாக அமையும் சூழல் பொருளாதாரச் சூழல் ஆகும்.(02 புள்ளி)

03. வணிக அமைப்புக்களின் பண்புகள் சில கீழே தரப்படுகின்றன.

A. அங்கத்தவர் நலன் கருதி செயற்படுகின்றமை

B. சட்டஆளுமை காணப்படுதல்

C. நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது

D. மிகை அங்கத்தவர்களிடையே பகிரப்படல்

E. நட்டப்பொறுப்பு பரவலாக்கப்பட்டுள்ளது

(அ) மேற்கூறிய பண்புகளில் கூட்டுறவு வணிக அமைப்புக்களின் பண்புகளைக் குறிக்கும் எழுத்துக்களைக் குறிப்பிடுக.

(ஆ) எழுத்து B, C என்பவற்றினால் குறிக்கப்படும் பண்புகள் எவ்வகை இலாப நோக்குள்ள வணிக அமைப்பிற்கு காணப்படுகின்றது. (02 புள்ளிகள்)

04. (அ) அரச திணைக்களங்களின் பண்புகள் இரண்டு தருக.

(ஆ) வணிகமொன்று தனது முகாமைச் செயற்பாடுகளை நபர்கள் பலபேர்களுக்கிடையில் மேற்கொள்ள எதிர்பார்க்கின்றதாயின் எவ்வகை வணிக அமைப்பை குறித்த வணிகம் ஆரம்பிக்க முடியும். (02 புள்ளிகள்)

(மொத்தம் 8 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி 11
## கணக்கியல்
### ( இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக)

**வினா இல 05**

01. (அ) கணக்கீட்டின் பிரதான நோக்கத்தைக் குறிப்பிடுக.
    (ஆ) வணிகமொன்றில் காணப்படும் சொத்துக்களின் இரு பிரதான வகைகளையும் குறிப்பிடுக.
    (02 புள்ளிகள்)

02. (அ) வணிகமொன்றில் உரிமை குறைவடையும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.
    (ஆ) நடைமுறைப்பொறுப்புக்களுக்கு இரண்டு உதாரணம் தருக. (02 புள்ளிகள்)

03. (அ) தூயவன் மரத்தளபாட விற்பனையகமொன்றை நடாத்திச் செல்கின்றார் அவரது வணிகத்தில் காணப்படும் உருப்படிகள் சில கீழே தரப்படுகின்றன.
    A. உற்பத்தி செய்த மரத்தளபாடங்களின் இருப்புக்கள்
    B. பலகைகளை அரியும் இயந்திரங்கள்
    C. கடனடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட பலகைகளுக்கு செலுத்த வேண்டிய காசு
    D. வணிகத்தை விரிவுபடுத்தவென இலங்கை வங்கியில் பெறப்பட்ட வங்கிக்கடன்
    மேற்படி உருப்படிகளை பின்வரும் தலைப்புக்களில் வேறுபடுத்திக் காட்டுக.
    (அ) நடைமுறைச்சொத்து (இ) நடைமுறைப் பொறுப்பு
    (ஆ) நடைமுறையல்லாச் சொத்து (ஈ) நடைமுறையல்லாப் பொறுப்பு

    (ஆ) அரிச்சந்திரன் வணிகத்தில் 2019.08.01 ஆம் திகதி பின்வரும் மீதிகளை காணக்கூடியதாகவுள்ளது.

| | |
|---|---|
| மோட்டார் வாகனம் | ரூ 300 000 |
| சரக்கிருப்பு | ரூ 100 000 |
| காசு | ரூ 75 000 |
| வங்கிக்கடன் | ரூ 150 000 |
| கடன்கொடுத்தோர் | ரூ 50 000 |

    (அ) மொத்தச் சொத்தின் பெறுமதியைக் கணிப்பிடுக.
    (ஆ) மொத்தப் பொறுப்பின் பெறுமதியைக் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

04. தேன்மொழி வணிகத்தில் 2019 ஜனவரி மாதம் முதல் வாரத்தில் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்களினால் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்பட்ட தாக்கங்கள் வருமாறு.

| | காணிகட்டிடம் | + சரக்கிருப்பு | + கடன்பட்டோர் | + காசு | = | உரிமை | + வங்கிக்கடன் | + கடன்கொடுத்தோர் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01/01 | | +100000 | | - 50000 | = | | | + 50 000 |
| 03/01 | | | | - 20000 | = | - 20000 | | |
| 04/01 | | | | -100000 | = | +100000 | | |
| 05/01 | | | - 30000 | \|+30000 | | | | |

❖ ஒவ்வொரு தினத்திலும் இடம்பெற்றதாகக் கருதக் கூடிய கொடுக்கல்வாங்கல்களை பெறுமானங்களுடன் முன்வைக்க. (04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

**வினா இல 06**

01. (அ) கொடுப்பனவுக் கைச்சாத்து என்றால் என்ன?
    (ஆ) சொத்துக்களையும், பொறுப்புக்களையும் வேறுபடுத்துவதற்கு பல காரணிகள் உள்ளன. சொத்துக்களுக்கும், பொறுப்புக்களுக்கும் பொருந்தும் பொதுவான பண்புகள் ஒன்றினைக் குறிப்பிடுக.
    (02 புள்ளிகள்)

02. (அ) பொதுநாட்குறிப்பில் பதியக்கூடிய கொடுக்கல்வாங்கல்களுக்கு இரண்டு உதாரணம் தருக.



kalvi.lk

(ஆ) தொலைபேசி வங்கிச்சேவையினூடாக வணிகர் ஒருவர் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

03. ஜெயா எழுதுகருவி விற்பனையகத்தில் 2019 யூன் மாதத்தில் நடைபெற்ற கொடுக்கல்வாங்கல்களுக்கமைய தயாரிக்கப்பட்ட காசுப்புத்தகம் கீழே தரப்பட்டுள்ளது.

| திகதி | ப.இ | விபரம் | பே.ப | தொகை | திகதி | கை.இ | விபரம் | பே.ப | தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01.06 | | மீதி | | 125 000 | 04.06 | 001 | கொள்வனவு | | 45 000 |
| 03.06 | 01 | வங்கிக்கடன் | | 50 000 | 15.06 | 002 | வாடகை | | 8 000 |
| 07.06 | 02 | விற்பனை | | 40 000 | 24.06 | 003 | பற்று | | 5 000 |
| 20.06 | 03 | விதுரன் (கடன்பட்டோர்) | | 30 000 | | | மீதி சென்றது | | 187 000 |
| | | | | 245 000 | | | | | 245 000 |

❖ மேலே காசுப்புத்தகத்தில் காட்டப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை பேரேட்டுக்கு மாற்றுவதற்கு அவசியமான நான்கு இரட்டைப்பதிவுகளைத் தருக. (04 புள்ளிகள்)

04. தேவிகா வணிகத்தில் இடம்பெற்ற சில்லறைச் செலவுகள் தொடர்பான விபரங்கள் வருமாறு:-

❖ சில்லறை காசு வசக்கட்டு நிதி ரூ 3 000
❖ 2019 ஜனவரி மாதத்தில் சில்லறைச் செலவுகளின் மொத்தப் பெறுமதி ரூ 2 850
❖ 2019 பெப்ரவரி 01 ஆம் திகதி சில்லறைக் காசு மீள் நிரப்பப்பட்டது.
❖ 2019 பெப்ரவரி மாதத்தில் நடைபெற்ற சில்லறைச் செலவுகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| திகதி | கை. இல | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 02.02.2019 | 001 | ஓட்டோ செலவு | ரூ 160 |
| 04.02.2019 | 002 | கவிதாவிற்கு செலுத்திய சம்பள முற்பணம் | ரூ 300 |
| 11.02.2019 | 003 | பேனா, பென்சில் செலவு | ரூ 200 |
| 13.02.2019 | 004 | சீனி, தேயிலை செலவு | ரூ 240 |
| 16.02.2019 | 005 | பேருந்துக் கட்டணம் | ரூ 250 |
| 18.02.2019 | 006 | 02 பயிற்சிக்கொப்பி | ரூ 320 |
| 25.02.2019 | 007 | மென்பானம் | ரூ 150 |

(அ) போக்குவரத்து, உபசரிப்பு, எழுதுகருவி என்ற பகுப்பாய்வு நிரல்களை உள்ளடக்கிய சில்லறை காசேட்டை தயாரித்து வசக்கட்டை மீள்நிரப்புக.
(ஆ) பகுப்பாய்வு நிரல்களின் கூட்டுத்தொகையினை பேரேட்டுக்கு மாற்றுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

**வினா இல 07**

01. (அ) வங்கிக் கூற்று என்றால் என்ன?
(ஆ) வங்கிக்கணக்கு இறுதி மீதியும், வங்கிக் கூற்று இறுதி மீதியும் வேறுபடுவதற்கான காரணங்களில் வங்கிக் கணக்கில் திருத்தம் செய்யவேண்டிய விடயங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

02. 2019 மே மாதத்தில் வணிகமொன்றில் தயாரிக்கப்பட்ட விற்பனை நாட்குறிப்பேடு கீழே தரப்பட்டுள்ளது.

| திகதி | பட். இல | கொள்வனவாளர்கள் | தொகை | பேப. |
|---|---|---|---|---|
| 12.05.2019 | 375 | மல்லிகா | 7 300 | |
| 26.05.2019 | 402 | சுகந்தி | 4 000 | |

❖ மேற்படி நாட்குறிப்பேட்டின் பூரணப்படுத்தி பேரேட்டுக் கணக்கிற்கு மாற்றிக் காட்டுக. (02 புள்ளிகள்)

03. கமலா அன்ட் விமலா வணிகத்தில் 2019 ஏப்ரல் மாதத்தில் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்குமீதியும், வங்கிக் கூற்று மீதியினையும் பரிசீலித்தபோது கீழ்வரும் தரவுகள் பெறப்பட்டன.

- வைப்புச் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்ட காசோலைகளின் பெறுமதி ரூ 40 000
- வழங்கப்பட்டு வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட காசோலைகளின் பெறுமதி ரூ 28 000
- வைப்புச் செய்யப்பட்டு வசூலிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூ 30 000
- வழங்கப்பட்டு வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூ 20 000
- வங்கிக்கட்டணம் ரூ 6 000
- காசோலை புத்தகக்கட்டணம் ரூ 2 400
- முதலீட்டு வருமானம் ரூ 5 000
- நேரடி வைப்புகள் ரூ 15 000

வேண்டப்படுவது:-
(அ) வங்கிக் கணக்கு மீதியைவிட வங்கிக்கூற்று மீதி குறைவாக இருப்பதற்கான காரணங்கள் எவை?
(ஆ) வங்கிக் கணக்கு சீராக்கத்தில் கவனத்தில் கொள்ளப்படும் விடயங்கள் எவை?
(04 புள்ளிகள்)

04. சண்முகம் வணிகத்தில் 2018.12.31 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியில் செலவுப்பக்கம் ரூ 1000 குறைவாகக் காணப்பட்டது. எனவே குறித்த வணிகத்தின் கணக்காளரினால் கணக்கேடுகள் பரிசோதிக்கப்பட்டபோது பின்வரும் தவறுகள் கண்டு பிடிக்கப்பட்டன.

- காப்புறுதிக்கட்டணம் செலுத்தியது ரூ 2000 கணக்குகளில் இருமுறை பதிவு செய்யப்பட்டது.
- 6500 க்கு கடனுக்கு விற்பனை, விற்பனை கணக்கில் ரூ 5 500 என பதிவு செய்யப்பட்டுள்ளது.
- ரூ 7 000 பெறுமதியான கொள்வனவுப் பட்டியல் ஒன்று கணக்கு புத்தகங்களில் பதிவு செய்யப்படவில்லை.

வேண்டப்படுவது:-
(அ) மேற்குறித்த வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவு
(ஆ) தொங்கல் கணக்கு (04 புள்ளிகள்)
(மொத்தம் 12 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

**Whatsapp**
**075 287 1457**